BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# பாலமலை பழங்குடி மக்களின் வரலாறும் வாழ்வியலும்

**பெ.விஜயகுமார்**
முனைவர்ப் பட்ட ஆய்வாளர், அறிவியல்தமிழ் (ம) தமிழ் வளர்ச்சித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம் , தஞ்சாவூர் -10, Email id : vijaymyna247@gmail.com,
நெறியாளர் : **முனைவர் இரா. இந்து**
பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், அறிவியல்தமிழ் (ம) தமிழ் வளர்ச்சித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம் , தஞ்சாவூர் -10,

**ஆய்வுச்சுருக்கம்**

அறிவியல் தொழில் நுட்பம் நிறைந்த இன்றைய காலக்கட்டத்தில் பாலமலை பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையில் பண்பாடுகள், கலாச்சாரங்கள், வேளாண்மை மற்றும் இயற்கை சார்ந்தும், அடிப்படை வசதிகள் அற்ற எளிய வாழ்க்கை முறை வாழ்ந்து வருகின்றனர். இதனால் அம்மலையிலிருந்து சமவெளிப்பகுதிகளுக்குக் குடிப்பெயர்வதனால், அவர்களின் பண்பாடுகள், நாகரீகங்கள் அழிந்து வருகின்றனர். அவற்றைப் பாதுகாக்காவும் , வருங்காலங்களில் பழங்குடிமக்களின் வரலாற்றை அறிந்து கொள்ளும் விதமாக இவ்வாய்வு அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

பாலமலை பெயர்க்காரணம், பாலமலையும் நிலவமைப்பும், பாலமலை இருளப்பழங்குடி – இடப்பெயர்வு, வாழ்விடமும் சூழலும், விளைப்பொருட்களும் உற்பத்தியும், போக்குவரத்து தேவையும் நிறையும், பழங்குடிகளின் கல்வி நிலை, கொடைக்கானல் ஆசிரியர், தெய்வமும் குலப்பெயர்களும்

**முன்னுரை**

சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம் கொளத்தூர் ஒன்றியத்தில் பாலமலை மலைத்தொடர்களில் மலையாளி எனப்படும் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் வாழ்க்கை முறையானது சுற்றுச்சூழல் சார்ந்து அமைந்துள்ளது. அடிப்படை வசதிகள் இல்லாத காலத்திலும் அவர்கள் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கம், ஆடைகள், குடியிருப்புகள், நிலஅமைப்புகள், கல்விநிலையங்கள், வழிப்பாட்டு றைகள், தொழில்முறைகள் போன்றவற்றில் பல மாற்றங்கள் அடைந்தாலும் பாலமலை மலையாளிகள் தங்களின் முன்னோர்களின் கலாசாரம், பண்பாடு மாறமல் இன்றளவும் வாழ்ந்து வருகின்றனர் அம்மக்களின் வாழ்வியலை ஆவணப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பாலமலை பெயர்க்காரணம்**

இம்மலையில் பிரசித்திப் பெற்ற சித்தேஸ்வரன் மலைக்கோயில் வடக்கு பார்த்தவாறு அமைந்துள்ளது இருளர் இனத்தைச் சார்ந்த மக்கள் இக்கோயிலினைக் கட்டியெழுப்பி வழிபாடு நடத்தி வந்தனர், இம்மலையில் இருளைக்கிழங்கு மண்ணில் புதைந்து காணப்படும், இக்கிழங்கைப் பறிப்பதற்காக இரும்பு கடப்பாறையால் தோண்டும் பொழுது, பூமியில் புதைந்துள்ள சிவன் தலையின் நுனியில் கடப்பாறை பட்டதால் திடிரென பால் பொங்கி எழுந்ததால் பாலமலை எனப் பெயர் பெற்றது என கூறுவர். இந்தக் கதைகளைப் போலவே கோயிலின் கருவறையில் உள்ளே சிவலிங்கம் அமைந்துள்ளது. இக்கோவிலிலுள்ள கருவறையில் ஈஸ்வரன், கிருஷ்ணன், பிரம்மா ஆகிய மூன்று தெய்வங்களும் அமைந்த ஒரே கோவிலாக காணப்படுகிறது.

**பாலமலை அமைவிடமும் நிலவமைப்பும்**

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்தில், கொளத்தூர் ஒன்றியத்தில் பாலமலை அமைந்துள்ளது இம்மலையானது துண்டுமலையாகக் காணப்படுகிறது. இம்மலையானது 4927 அடி உயரத்தில் அமையப்பெற்றுள்ளது. எந்த வழியில்

சென்றாலும் $45^0$ செங்குத்துக் கோணத்தில் அமையப்பெற்றுள்ளது. இம்மலையில் சுமார் 33 குக்கிராமங்கள், 300 குடும்பங்கள், 5000க்கும் மேற்பட்ட பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இம்மலைக்கு நெருஞ்சிப்பேட்டை, கண்ணாமூச்சி, பெரியகுளம், இராமன்பட்டி, குருவரெட்டியூர் என ஐந்து வழிதடங்கள் வழிசெல்லாம். இம்மலைக்கு இரண்டு, மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் பயணங்களை மேற்கொள்ளலாம் (பெ. பொன்னுசாமி, 50, ஆண், பெரியகுளம், வாழைக்காடு, பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம்) என குறிப்பிடுகிறார்.

**பாலமலை இருளப் பழங்குடி - இடப்பெயர்ப்பு**

இருளர் இன மக்கள் வாழ்ந்த பகுதிகளில் பயன்படுத்திய விளைநிலங்கள், சித்தேஸ்வரன் கோயில், ஆகியன புதியதாகக் குடியேறிய மக்களுக்குச் சொந்தம் எனச் செப்புப்பட்டயத்தில் எழுதி தாசரிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றனர். இந்தப் பகுதி மக்கள் குடி அமர்த்தி விட்டு, அவர்கள் அருகில் உள்ள சத்திய மங்கலம், கடம்பூர், மல்லி மதுரம் ஆகிய பகுதிகளில் குடிப்பெயர்ந்தனர்.

**மலையாளிப் பழங்குடிகளின் இடப்பெயர்வு வரலாறு**

காஞ்சிபுரம் நாட்டில் காராள வேளாளர் வம்சத்தைச் சார்ந்த ஒரு அண்ணன், இரு தம்பி என மூன்று பேர் இருந்துள்ளனர் இவர்கள் காரியப்பெருமாள் கோவிலில் வழிபாடு செய்து வந்துள்ளனர். மூவரில் கருத்து வேறுபாடு காரணமாகப் பெரிய அண்ணன் திருமணம் செய்து கொண்டு கல்வராயன் மலைக்குக் குடிப்பெயர்ந்தார், இளையவன் பச்சைமலைக்குக் குடிப்பெயர்ந்தார், கடைசியாகப் பிறந்தவன் கொல்லிமலைக்குக் குடிப்பெயர்ந்தான். பிறகு அக்குடும்பம் கொல்லிமலை பயலநாடு என்னும் இடத்திலிருந்து சேந்தமங்கலம், எடப்பாடி, பூலாம்பட்டி நெருஞ்சிப்பேட்டை வழியாகப் பாலமலை பெரியகுளம் என்னும் இடத்தில் குடிப்பெயர்ந்தனர். வழியில் பூலாம்பட்டி ஆற்றங்கறையில் தெய்வக் கல்லை வைத்து குலதெய்வமாக வழிபட்டு வணங்கி வருகின்றனர் பிறகு, இத்தெய்வத்திற்குச் செல்லாண்டியம்மன் எனப் பெயர் சூட்டினர்கள். இன்றைய காலகட்டத்தில் இக்கோயிலில் பங்குனி மாதத்தில் திருவிழா கொண்டாடப்படுகிறது. இக்கோயிலின் வரலாறாக செப்பேடுகள் காணப்படுகின்றன. இச்செப்பேடுகள் கோயிலில் உள்ள மடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. (கு.சிவலிங்கம், 72, ஆண், துவரங்காடு, 6ம் வகுப்பு, பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம்) என்பதை தெரிந்து கொள்ள முடிந்தது.

**வாழ்விடமும் சூழலும்**

இம்மலையில் வசிப்போர் அனைவரிடமும் சொந்த நிலங்கள் இருக்கின்றன. ஒரு சில நபர்களிடம் மட்டும் சொந்த நிலம் இல்லை , விவசாயத்திற்கு ஏற்றவாறு நிலம் அமையவில்லை மேடு, பள்ளம் அதாவது கரடு முரடான விளைநிலங்களாக அமைந்துள்ளது. போதுமான அளவிற்குத் தண்ணீர் வசதிகளும் கிடையாது. மழை பெய்தால் மட்டுமே மூன்று மாதக் காலம் வேளாண்மை செய்ய இயலும். விவசாயம் செய்து அறுவடைக் காலங்களில் குரங்கு, மயில், நரி, காட்டுப்பன்றி, கரடி போன்ற பல விதமான விலங்கினங்களுக்கு உணவுக்குப் போக மிதமுள்ள தானியங்களை அறுவடை செய்து பாதுகாத்துக் கொள்வார்கள் இரவுப் பகல் பாராமல் தானியங்களுக்குக் காவலாக இருந்தால் மட்டுமே, அவர்களின் அன்றாட தேவைகளுக்குக் கிடைக்கப்பெறும் (சித்தன், 65, ஆண், விவசாயம், ஈச்சாங்காடு , பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம்) என்பதை அறிய முடிகிறது.



**விளைப்பொருட்களும் உற்பத்தியும்**

ராகி, கம்பு, சோளம், வரகு, சாமை, கருந்திணை, திணை, நெல், பனிவரகு, அவரை, மஞ்சள், வெங்காயம், மரவள்ளிக்கிழங்கு, இருளைக்கிழங்கு போன்ற தாவரங்களைப் பயிரிடுகின்றனர்.மா, பலா, கொய்யா, வாழை, தேன், சீதாப்பழம், மாதுளைபழம், பப்பாளிப்பழம், நாவல், விளாம்பழம், பெட்டானா காந்தாரி ஆகிய பழவகைகள் கிடைக்கின்றன.

தேக்கு, வேங்கை, எட்டிமரம், ஈட்டி, புளியமரம், கிழுவம், கிடுநடுங்கி, தொடநடுங்கி, வெட்பாலை, வேங்கை, உதிர வேங்கை, கடுக்காய் மரம், செம்மரம், கருங்காலி, மாவிலங்கு, சரக்கொன்றை, குங்குலியம், புரசு, மூங்கில் மற்றும் மூலிகை மரங்கள் உள்ளிட்ட பல அரிய மர வகைகள் காணப்படுகின்றன. இம்மலையில் விளைவிக்கக் கூடிய பொருட்களைச் சமவெளிப் பகுதிகளுக்குச் சென்று சந்தை, தெருமுனை, மொத்தம் மற்றும் சில்லறை விற்பனையாக செய்து வாழ்ந்து வருகின்றனர்(ஈஸ்வரி, 45, பெண், விவசாயம், வாழைக்காடு, பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம்) என்று கூறுகிறார்.

**போக்குவரத்துத் தேவையும் நிறையும்**

இவர்கள் 300 – 400 ஆண்டுகள் இங்கு வாழ்ந்து வந்ததாக்க குறிப்பிடுகிறார்கள். இவர்களின் வாழ்க்கை முறையானது, அன்றைய காலகட்டத்தில் அடிப்படை வசதிகள் இல்லாதவர்களாகக் காணப்பட்டனர். அடிப்படை வசதிகளை ஏற்படுத்த 8 மையில் கல் தூரம் கால்நடையாக நடந்து சென்று திரும்புதல் வேண்டும். இக்கிராமக்கள் 2015 ஆம் ஆண்டில் போராட்டம் நடத்தி வனத்துறையினரிடம் முறையிட்டு அனுமதிப் பெற்று ஊர்ப்பஞ்சாயத்துத் தலைவர், செயலாளர், ஊர்ப்பொதுமக்கள், இயந்திர வாகனங்களைப் பயன்படுத்தி மண் சாலையை அமைக்கத் தொடங்கினார். சாலையை அமைப்பதற்கு ஊர்ப் பொதுமக்கள் அனைவரும் ஒன்று திரண்டு நிதித் திரட்டி வழிபாதையை அமைத்தனர். இதில் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு சாலைப் பணிகளைச் சீர செய்து வந்துள்ளனர். (பிரகாஷ், 35, டிரைவர், நாகம்பதி, பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம்). என குறிப்பிடுகிறார்.

**பழங்குடிகளின் கல்வி நிலை**

*“கண் இருக்குது குருடாகாவும்*
*காது இருக்குது செவிடாகவும்*
*வாய் இருக்குது ஊமையாகவும்”*

எனப் படிப்பறிவு இல்லாமல் வாழ்ந்து வந்தனர். 30 – 40 ஆண்டுகளுக்கு முன்னர் பெரிய குளம் மற்றும் நத்தக்காடு என்னும் கிராமத்தில் பள்ளிகள் இருந்து வந்த பின்பு, அதனை உண்டு உறைவிட நடு நிலைப்பள்ளியை இராமன்பட்டியில் மாற்றி அமைத்தனர் இன்றைய காலகட்டத்தில் இரண்டு பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளிகளும், நடுநிலைப்பள்ளிகளும், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளும் அமைந்துள்ளன. இக்காலத்தில் மேல்நிலைப் படிப்பு மற்றும் பட்டப்படிப்பு சமவெளி சென்று விடுதியில் தாங்கி பயின்று வருகின்றனர் (சி. செல்லப்பன், 66, விவாசயம், நாகம்பதி, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம் ) என குறிப்பிடுகிறார்

**கொடைக்கானல் ஆசிரியர்**

ஆரம்ப காலக்கட்டத்தில் பள்ளிகள் இல்லாத போது, கொடைக்கானல் இருந்து பாலமலைக்கு ஒருவர் வந்து அம்மக்களிடம் கல்விக் கற்று தருவதாகக் கூறி, வகுப்பறை வசதி இல்லாத காலக்கட்டத்தில் புளியமரத்தடியில் கல்வி கற்பித்திருக்கிறார்.



அவர் மாணவர்களிடம் கவிதை, பாடல்கள், நாடகம், கதை மற்றூம் பல்வேறு கற்றல் அனுபவங்களைப் பகிர்ந்து வந்துள்ளார்

அப்பொழுது மாணவர்களிடம் அவ்வூரின் பெயர்களைக் கொண்ட பாடலைப் பாடியுள்ளார்.

*“பாலமலையாம் பேரு*
*நாகப்பதியாம் ஊரு*
*நாகம்பதி ஊரு*
*புளியமரத்து துவரு*
*பள்ளிக்கூடத்தப் பாரு*
*கிழக்கு நோக்கி பாரு*
*எறக்கம் துவரங்காடு ஊரு*
*தெக்க நோக்கி பாரு*
*பாலி கொங்கலியங் எங்க ஊரு*
*மேற்க நோக்கி பாரு*
*மேடு பெரியகுளமாம் பெரு”*

எனப் பாடல் வரிகளின் மூலம் ஊரின் பெயர்களைக் கல்வி கற்றலின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். ஏறக்குறைய 60 முதல் 90 வரையிலான மாணவர்கள் , பெரியவர்கள் அவரிடம் கல்வி பயின்று வந்திருக்கின்றனர் (கு.சிவலிங்கம், 72, ஆண், துவரங்காடு, 6ம் வகுப்பு, பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம்)என குறிப்பிடுகிறார்.

**தெய்வமும் குலப்பெயர்களும்**

இவர்களின் குலதெய்வத்தின் குலப்பெயர்களாக அரப்பளியம்மாள் , அரப்பளி, சித்தன், சித்தாயி, செல்லம்மாள், செல்லாயி என அமைந்துள்ளது. அத்தெய்வங்களின் அக்காலம் முதல் இன்றைய காலம் வரையில் தங்களுடைய ஆண், பெண் பிள்ளைகளுக்குக் குலப்பெயர்கள் வைப்பது வழக்கமாகக் கொண்டுள்ளனர். இன்றைய காலகட்டத்தில் நவீன பெயர்கள் வைக்கும் முறையைக் கொண்டில்லாமல் அவர்களின் பண்பாட்டு ரீதியாக வீட்டுக்கு ஒருவரின் பெயரைக் குலதெய்வத்தின் பெயராக வைக்கப்படுவதை வழக்கமாக வைத்துள்ளனர் (இளையம்மா ,70, பெண், விவசாயம், நத்தாக்காடு, பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம்) என்பதை அறியமுடிகிறது.

**உறைவிடமும் கட்டுமானமும்**

*“நாடு என்ப நாடா வளத்தன; நாடு அல்ல*
*நாட வளம் தரு நாடு” ( குறள் -739)*

வேற்று நாடுகளை எதற்கும் வேண்டாதபடி, எல்லா வளமும் கொண்டதே நல்ல நாடு என்பர்; பிறர் உதவியை நாடி அதனால் வளமை பெறும் நாடு, நாடே ஆகாது இக்குறளுக்கு ஏற்றார் போல் வீடுகளுக்குத் தேவையான கட்டுமான பொருட்களை அவர்களே தயாரித்துக் கொள்கின்றனர். கூரை வீட்டைக் கொணங்கு புற்களினால் அமைக்கப்படுவதும் குச்சியால் ஆன குத்தேரி வீடுகளும், கொட்டாய் வீடுகளும், தென்னங்கீற்றுகளால் வேயப்பட்ட வீடுகளும், கருங்கற்களால் கட்டப்பட்ட வீடுகளும், அட்டைவீடுகளும், அரசு வழங்கும் தொகுப்பு மற்றும் பசுமை வீடுகளும் அமைத்துக் கொண்டனர். 2015 க்கு முந்தைய காலகட்டம் வரைகழுதைகளின் மூலம் பொருட்கள் ஏற்றுமதி செய்து வந்தனர், சிமெண்ட், ஜல்லி, மணல், கம்பிகள் மற்றும் மூலப்பொருட்கள் ஆகியன சம வெளிப்பகுதிகளிலிருந்து தலையில் சுமந்து சென்று வீடுகளை அமைத்துக் கொண்டனர்(ஆராப்பளி, 71, ஆண், விவசாயம் , குழிக்காடு, பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம்) என்பதை அறியமுடிகிறது.

**பாலமலை மக்களின் ஆடைகள்**

ஆள்பாதி ஆடை பாதி, ஆடையில்லாத மனிதன் அரை மனிதன் என்ற பழமொழிகளுக்கு ஏற்றார் போல் ஒரு மனிதனின் தோற்றம், ஒழுக்கம் மற்றும் மதிப்பின் பாதியை அவனின் ஆடைகள் தீர்மானிக்கின்றன. இம்மலைவாழ் மக்களுக்குகென எந்த ஒரு பாரம்பரிய ஆடைகளும் இல்லை. சமவெளிப் பகுதி மக்களைப் போலவே ஆண்கள் வேட்டி, சட்டை, லுங்கி, பனியன்களை அணிகின்றனர். பெண்களின் ஆடைகளாகப் புடவை, தாவணி, பாவாடை போன்றவற்றை அணிகின்றனர். திருமணம் மற்றும் விழாக்காலங்களில், மற்ற இனங்களைப் போலவே பட்டு, வேட்டி, பட்டுத்துண்டு, பட்டுச்சேலை அணிந்து கொள்கின்றார்கள். இவர்களுக்குகென அடையாளமாகத் தனிப்பட்ட பாரம்பரிய உடைகள் ஏதும் இல்லை. நடைமுறைகளோடு ஒத்துவாழும் இவர்கள் பொதுவாகத் தமிழ்க் கலாச்சாரத்தையே பின்பற்றுகின்றனர் (சி.வெள்ளையம்மா, 70, பெண் துவரங்காடு, விவசாயம், பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம்) என்பதை அறியலாகிறது.

**முடிவுரை**

பாலமலை மலையாளிப் பழங்குடியின மக்களின் வாழ்வியலானது இயற்கையோடு இயைந்தும் முன்னோர்களின் வாழ்வியல்களைச் சார்ந்தும் வாழ்ந்தும் வருகின்றனர். பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள்,

இருப்பிடம், அமைப்புமுறை, உணவு, உடை, கல்விநிலை முதலியவற்றைப் பாரம்பரியமாகப் பாதுகாத்து வருகின்றனர். அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்கள் வளர்ச்சிஅடைந்தாலும், இவர்களின் தனித்துவமான பண்பாடுகள் மற்ற மலையாளிப் பழங்குடியினரைப் போன்று தங்களின் சமுதாயத்தின் நம்பிகைகளையும் பாரம்பரியத்தையும் கடைப்பிடித்து வருகின்றனர். இன்றளவும் என்பது இவ்வாய்வின் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

1. புலியூர்க் கேசியன் உரை – திருக்குறள் புதிய உரை, முதற்பதிப்பு 15 செப்டம்பர் 1998, தென்றல் நிலையம், 12 பி, மேல சன்னதி, சிதம்பரம் – 608001.

**தகவலர்கள் பட்டியல்**

1. பெ. பொன்னுசாமி, 50, ஆண், பெரியகுளம், வாழைக்காடு, 10ம் வகுப்பு பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம் . 14.06.2026.
2. கு.சிவலிங்கம், 72, ஆண், துவரங்காடு, 6ம் வகுப்பு, பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம் . 10.06.2026.
3. சித்தன், 65, ஆண், விவசாயம், ஈச்சாங்காடு , பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம் . 11.06.2027.
4. ஈஸ்வரி, 45, பெண், விவசாயம், வாழைக்காடு ,பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம் . 14.06.2026.
5. பிரகாஷ், 35, ஆண், டிரைவர், நாகம்பதி, பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம். 13. 06. 2026.
6. சி. செல்லப்பன், 39, ஆண், பெரியகுளம், வாழைக்காடு, பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம் . 10.06.2026.
7. இளையம்மா, 70, பெண், விவசாயம், நத்தாக்காடு, பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம் . 13.05.2026.
8. ஆராப்பளி, 71, ஆண், விவசாயம் , குழிக்காடு, பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம் . 14.06.2026.
9. சி,வெள்ளையம்மா, 70, பெண் துவரங்காடு, விவசாயம், பாலமலை, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம் . 10.06.2026.

*****